செஞ்சியில் தேவையான அளவு அரசு நிலம் இருந்தால், தேவையின் அடிப்படையில், அரசு அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, அங்கு விதைப் பண்ணையும், விதை சுத்திகரிப்பு நிலையமும் அமைப்பதற்கான சூழ்நிலை வகுத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்விக்கு பதிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 86, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. கோவிந்தராசு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

86—

புதிய வட்டம்

***6160—திரு. மா. கோவிந்தராசு:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேராவூரணி தொகுதியிலுள்ள திருச்சிற்றம்பலத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10–40

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9–6–2003–ல் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களான பரப்பளவு, மக்கள்தொகை மற்றும் கிராமங்களின் எண்ணிக்கை ஆகியவை பூர்த்தியாகாததால், திருச்சிற்றம்பலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் உருவாக்கச் சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. கோவிந்தராசு அவர்கள்.

2017 ஜூன் 24]

திரு. மா. கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வாழும் திசை நோக்கி வணங்குகிறேன். அவர்கள் வழியிலே நல்லாட்சி நடத்துகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்கி எனது உரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிற்றம்பலம், பேராவூரணி தொகுதிக்குட்பட்ட சுமார் 40 பஞ்சாயத்துகளை உள்ளடக்கிய பகுதியாகும். இந்த 40 பஞ்சாயத்துகளும் பட்டுக்கோட்டை தாலுகாவோடு இணைக்கப்பட்டிருக்கிறது. சாதாரணமாக OAP—முதியோர் ஓய்வூதியம்—பெற கையெழுத்து வாங்க வேண்டுமென்றாலும் ஏறத்தாழ 35 ரூபாய், 40 ரூபாய் பேருந்துக் கட்டணம் செலுத்தி, அந்த கையெழுத்தைப் பெற வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. ஆகவே, கருணையோடு என்னுடைய கோரிக்கையை பரிசீலித்து திருச்சிற்றம்பலத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அமைத்துத் தரவேண்டுமென்று பணிவோடு கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி தொகுதி, திருச்சிற்றம்பலத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அமைத்தால், உத்தேச திருச்சிற்றம்பலம் வட்டத்திலே, திருச்சிற்றம்பலம், குறிச்சி, ஆண்டிக்காடு குறு வட்டங்களில் 62 வருவாய் கிராமங்கள் இருக்கும். மேற்கண்ட 3 குறு வட்டங்களின் கூடுதல் பரப்பு 139.47 சதுர கிலோ மீட்டர் ஆகும். ஒரு வட்டம் உருவாக்க அரசாணை (நிலை) எண் 279–ன்படி குறைந்தபட்ச பரப்பளவு 250 சதுர கிலோ மீட்டருக்கு மேல் இருக்க வேண்டும். ஆனால், மேற்கண்ட 3 குறு வட்டங்களையும் சேர்த்து 139.47 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு மட்டுமே உள்ளது. மேலும், பட்டுக்கோட்டை வட்ட தலைமை இடத்திலிருந்து திருச்சிற்றம்பலம் குறு வட்டம் அருகிலேயேதான் அமைந்திருக்கிறது. திருச்சிற்றம்பலம் குறு வட்டத்திற்கு மிக அருகிலேயே பேராவூரணி வட்டமும் அமைந்துள்ளது. பேராவூரணி வட்டம் நான்கு குறு வட்டங்களைக் கொண்ட சிறிய வட்டம் என்பதாலே பேராவூரணி வட்டத்திலிருந்தும், அதிலே அடங்கிய கிராமங்களை இதிலே சேர்க்க இயலாது.

மேலும், திருச்சிற்றம்பலம், குறிச்சி குறு வட்டங்கள் பேராவூரணி ஒன்றியத்திலும், ஆண்டிக்காடு குறு வட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியத்திலும் அடங்கியவையாகும். திருச்சிற்றம்பலம் சரகத்தில் 29 கிராம ஊராட்சிகள் மட்டுமே அடங்கியுள்ளன. எனவே, திருச்சிற்றம்பலத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

பட்டுக்கோட்டைக்கு அடுத்த தொகுதியாக பேராவூரணி வருகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே முன் வைத்திருக்கிறார்கள். மக்கள் நலன் சார்ந்து, மக்களுடைய வசதிக்காக முன்வைத்த அந்தக் கோரிக்கையினை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்பிலே மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, ஆய்வு செய்து, விதிமுறைகளைப் பூர்த்தி செய்யுமானால், பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. கோவிந்தராசு அவர்கள்.

திரு. மா. கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்தில், எங்கள் தொகுதியைச் சார்ந்த மாண்புமிகு திரு. எம்.ஆர். கோவேந்தன் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சராக இருந்த காலத்திலேயே திருச்சிற்றம்பலத்தை ஒரு தனி வட்டமாக அமைக்க வேண்டும் என்கின்ற ஆய்வு நடைபெற்றது. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கருணையோடு எங்கள் பகுதியிலே ஒரு வருவாய் வட்டத்தை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மக்களை நாடி அரசு என்கின்ற தத்துவத்தை நிறைவேற்றுகின்ற வகையிலே, அவர்களுடைய செயல் இருக்க வேண்டுமென்று பணிவோடு வேண்டி, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.

2017 ஜூன் 24]

திரு. உ. மதிவாணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கீழ்வேளூர் தொகுதியில் உலகப் புகழ்பெற்ற கிறித்துவ ஆலயம் அமைந்திருக்கிற வேளாங்கண்ணியைத் தலைமையிடமாகக் கொண்டு, விதிமுறைகளை ஓரளவு தளர்த்தியாவது ஒரு வட்டாட்சியர் அலுவலகம் அமைத்து, தனி வட்டமாகப் பிரிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை உங்கள் மூலமாக அறிந்து கொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையின் சேவையை மேம்படுத்தவும், மக்களுக்கு விரைவான சேவையை அளிக்கவும், வருவாய்த் துறையை மக்கள் எளிதில் அணுகவும் முன்மாதிரியான நடவடிக்கைகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எடுத்து வருவதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்கு அறிவார்கள். அந்த வகையிலே வருவாய்த் துறையின் வரலாற்றில் இதுவரையிலே இல்லாத வகையில் எங்கெங்கெல்லாம் தேவைகள் இருக்கின்றனவோ, எங்கெங்கெல்லாம் சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை வைக்கின்றார்களோ அந்தக் கோரிக்கைகளை கனிவோடு பரிசீலனை செய்து, வருவாய்த் துறை வரலாற்றிலே இதுவரை இல்லாத வகையிலே 70 புதிய வட்டங்களை உருவாக்கிய ஒரே அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 10–45

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மக்கள் நலன் சார்ந்த கோரிக்கையை முன்வைத்திருக்கிறார்கள். இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'விதிமுறைகளைத் தளர்த்தி' என்ற ஒரு வார்த்தையைச் சொன்னார்கள். விதிமுறைகளைத் தளர்த்தி அந்த வேலையைச் செய்வது சாலச் சிறந்ததாக இருக்காது. ஆகவே, விதிமுறைகளுக்குட்பட்டு, புதிய வட்டம் உருவாக்குவதற்கு, அருகிலிருக்கும் வட்டங்களில் இருக்கக்கூடிய கூடுதல் வருவாய் கிராமங்களை உள்ளடக்கிக் கொண்டுவந்து, இதுகுறித்து மாண்புமிகு

முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. லோகநாதன் அவர்கள்.*

திரு. கோ. லோகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்ற தாரக மந்திரத்தை மூல மந்திரமாகக் கொண்டு, தமிழக மக்களுக்காக அல்லும், பகலும் அயராது உழைத்து, தன்னையே அர்ப்பணித்த தியாகத் தாய், நான் வணங்கும் தெய்வம், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியிலே மிகவும் சிறப்பான முறையில் தமிழகத்திலே ஆட்சி நடத்திக்கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வைத்திணான் குப்பம் சட்டமன்றத் தொகுதி, கீழ்வைத்திணான் குப்பம் ஊராட்சி ஒன்றியம், கீழ்வைத்திணான் குப்பம் ஊராட்சியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வருவாய் வட்டத்தை உருவாக்கித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, அரசாணை நிலை எண் 279, வருவாய்த் துறை நாள் 9–6–2003–ல் வரையறுக்கப்பட்டுள்ள அளவுகோல்களின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*